**தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018**

---

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி, நோர்டிக் அபிவிருத்தி நிதியம் மற்றும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஆகியவற்றிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1711-எஸ்ஆர்ஜ(எஸ்எப்) ஆம் இலக்க, 2413எஸ்ஆர்ஜ ஆம் இலக்க, எஸ்எல்-பி-70 ஆம் இலக்க, எஸ்எல்-பி-92 ஆம் இலக்க, என்டிஎப்324 ஆம் இலக்க, பீஎல்ஏ201011 ஆம் இலக்க மற்றும் பீஎல்ஏ201012 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது, வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, மீன்பிடிகள் மற்றும் விவசாயம் என்பவற்றில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதன் மூலம் தென் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் வெளியீடாக 126 கிலோமிற்றர் தூரமுடைய இலங்கையின் முதலாவது நுழைவு, கட்டுப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைக்கு நுழைவு, காலி நகரத்துடன் இணைப்பதற்கான நுழைவு வீதியுடன் மேல்மாகாணத்திலுள்ள கொட்டாவ தொடக்கம் தென்மாகாணத்தலுள்ள மாத்தறை வரை தொடர்புபடுத்தல் என்பன காணப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 661.14 மில்லியனிற்கு சமமான ரூபா 107,873 மில்லியன் காணப்பட்டது. தென்பகுதி அதிவேகப் பாதையின் நிர்மாணத்திற்கான ஒட்டுமொத்த மூலங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கடனளிக்கும் முகவர்** | **உடன்பட்ட தொகை** | **சதவீதம்** |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | % |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 186.00 | 28.13 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 103.00 | 15.58 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 0.82 |
| சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 0.80 | 0.12 |
| சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி | 138.21 | 20.90 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 34.45 |
| **மொத்தம்** | **661.14** | **100.00** |

அதிவேகப் பாதையின் நிர்மான வேலைகள் 2014 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தென்பகுதி நெடுஞ்சாலை மற்றும் தென் மாகாணத்திலுள்ள 02 பாலங்களின் நிர்மான வேலைகளுடன் நேரடியான அல்லது மறைமுகமான இணைப்பைக் கொண்டிருந்த 14 தேசிய மற்றும் மாகாண

வீதிகளினை புனரமைப்பு செய்வதற்காக ரூபா 4.4 பில்லியன் கடன்களின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2018 திசெம்பர் 31 வரை கூட தொடரப்பட்டிருந்ததுடன் அதன் மீதான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 02 ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய மொத்தமாக ரூபா 194.67 மில்லியன் பிடிகாசு ஒப்பந்த நிபந்தனைகளின் உட்பிரிவு 14.12 இன் தேவைப்படி உரிய ஒப்பந்ததாரர்களினால் ஒப்புதல் பெறப்படாமல் அதிவேகப்பாதையில் கிரயத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது. | அமுல்படுத்தல் முகவரிற்கு ஒரு பொறுப்பு உருவாகுவதற்கான சாத்தியம். | பிடிகாசினை விடுவிக்க ஒப்பந்ததாரர் எவ்வித வேண்டுகோளையும் விடுவிக்கவில்லை. எனவே, 2018 இலான மூடுதல் செயற்பாட்டின் போது இத்தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட அதிவேகப்பாதையின் கிரயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 14.12 இன் வேண்டுதலிற்கிணங்க உரிய ஒப்பந்ததாரர்களின் ஒப்புதல் பெறப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

2006 இல் ஆரம்பிக்கப்பட்ட மேல்மாகாணத்திலுள்ள கொட்டாவ தொடக்கம் தென்மாகானத்திலுள்ள பின்னங்வ வரையான 95.05 கிலோமீற்றர்களின் தெற்கு அதிவேகப்பாதையின் பகுதியின் நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2011 நவம்பர் 27 இல் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடப்பட்டிருந்தது. 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட பின்னங்வ தொடக்கம் கொடகம வரையான 30 கிலோமீற்றர் அதிவேகப்பாதையின் ஏனைய பகுதிகளின் நிர்மான வேலைகள் 2014 மார்ச் 15 இல் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடப்பட்டிருந்தது. அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகளின் மொத்த கிரயம் ரூபா 116,347 மில்லியன் தொகையாக காணப்பட்டது. பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகள் 2014 இல் பூர்த்தியாக்கப்பட்டிருப்பினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் காணி சுவீகரிப்பு மீதான தீர்க்கப்படாத விடயங்கள் காரணமாக 2018 திசெம்பர் 31 வரை கூட தயாரிக்கப்பட்டு | செயற்திட்ட கண்கானிப்பு நோக்கங்கள் மீது மேலதிக கிரயங்கள் ஏற்படக்கூடிய வகையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடங்குவதற்கான | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | மிதமாக காணப்படும் நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்ட கண்கானிப்பு பிரிவின் செயற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தமாக ரூபா 6,766 மில்லியன், காணி சுவீகரிப்பு மற்றும் மீள்வழங்கள் சபையின் நிர்மானத்தின் கீழான ரூபா 3,928 மில்லியன் தொகையான மேலதிக கொடுப்பனவு மற்றும் ரூபா 347.98 மில்லியன் தொகையான இழப்பீட்டு கொடுப்பனவின் தாமதத்தின் மீதான வட்டி போன்றன உள்ளடங்கலாக 9,595 காணித்துண்டுகளை சுவீகரிக்க செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 06 பிரதேச செயலக பிரிவிலுள்ள 569 காணித்துண்டுகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட 1986 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு மற்றும் மீள்வழங்கள் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்படாமல் காணப்பட்டது. | சாத்தியம். | மூடப்படலும் வேண்டும். |